2016 பிப்ரவரி 20]

மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், இனிவருங்காலங்களில் புதிய விடுதிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

ஆரம்ப சுகாதார நிலையம்

***38095—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பநந்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதங்களை பணிவோடு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, குப்பநந்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2016 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

முற்பகல் 11–20

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மக்கள் போற்றும் மகத்தான தலைவி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பிறந்த தின விழாவை முன்னிட்டு என்னுடைய தொகுதியின் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும், அனைத்து அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் வாழ்த்த வயதில்லை, மனதார வணங்குகிறோம். அம்மா! சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலை மலைவாழ் மக்கள் வாழும் கிராமம். எனவே, அங்கு கிளையூரிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுகாதாரத் துறையிலே, வரலாறு காணாத அளவிற்கு, 187 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஐந்தாண்டுகளில் உருவாக்கி, சாதனை படைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது குறிப்பிட்டிருக்கின்ற கிளையூர் பகுதி மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கனிவான பரிசீலனையில் இருக்கிறது. உரிய நடவடிக்கை நல்லமுறையில் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.